PUDUKKOTTAI STATE

WAR INFORMATION BUREAU

WEEKLY BULLETIN

No 1

ACL - TVPL
03573
1871

PUDUKKOTTAI:
PRINTED AT THE SRI BRIHADAMBA STATE PRESS

1940

JL

V21194:19(3M) m N40

N40·1-12

99545

PUDUKKOTTAI STATE

WAR INFORMATION BUREAU.

LECTURE No. I.

In opening the first of what we hope will be a regular series of talks on the War situation, I have to make one point perfectly clear first. Pudukkottai is shortly to have its own "War Committee" on the model of the many Committees already established in the Presidency and elsewhere. One of the main functions of those Committees is to arrange "Propaganda." Now to my mind, a distinctly unpleasant flavour has come to surround that word, thanks mainly to a certain Dr. Goebbels. In short, to set up as a propagandist these days is to invite people to call one a liar. For this reason the Darbar have set up an organisation for the dissemination of accurate war and other political news, (anticipating one of the functions of its War Committee), to be known as the War Information Bureau whose business it is to publish news and sometimes views, based only and entirely on ascertained *facts*. True, our news will be derived mainly from British official sources (though neutral newspapers of repute will sometimes be quoted) but in case such sources may be accused of prejudice, and lest our bulletins receive less credence on that very account, I should like you to hear some preliminary observations as to the reliability of those sources compared with those forming the basis of Enemy Propaganda. I think you will have very little difficulty in making up your minds not only which you would like to believe, but which you *positively must* believe.

From the outset of the war, the British Government wisely decided that its people were not likely to submit to being spoon-fed with carefully selected details about their own fate and fortunes. It has not muzzled their press. British newspapers are not State-owned or staffed. The Government knows that Englishmen are so made that they do not forgive being misled, even if temporarily for their own good, that they have the guts to take the rough with the smooth, and that if there is bad news to communicate, then it must be communicated, with details as soon as those details are available. Similarly if there is good news in the offing, then complete verification must be made before publication of any report or account however enthusiastic and heartening. I think most of you will agree that the Prime Minister has proved himself a master of well-judged, accurate publicity, in short that official news under his Government's ægis is good enough to base our bulletins upon. This is,

of course, not to say that answers to a thousand questions the public might like to ask are always answered. To deceive the enemy is one of the legitimate practices of warfare, and the Germans would doubtless be just as interested as we ourselves to know whether our output of aeroplanes was one hundred, or one thousand or four thousand a month, or whether the S. S. 'So-and-so' was returning in ballast from Cape Town to Montevideo, or carrying 6,000 Australian troops to Plymouth. But within the bounds of prudence, we do not withhold the truth, pervert the truth or invent lies. Now listen to the other side of the picture.

Here are some samples, selected out of hundreds, of news administered by the German Government to their own civilian population, their fighting forces, and to the world in general, by radio, by newspaper and by official interviews. Most of these, I would add, were broadcast in India !

> *Berlin Broadcast of June 5.* "British prisoners were taken to the number of 3,30,000. This figure makes twice the strength of the British Regular Army in peace-time. This figure is the lowest minimum made known by the German Supreme Command and it must certainly not be taken as correct."

To anyone except the totally uninformed, it would certainly *not* be taken as correct! The strength of the British Army in peace-time was 25,000 men, for one thing. For another, it does not seem very clever of Dr. Goebbels to adapt exactly the number of British forces successfully withdrawn from Dunkirk, viz., 3,00,000, as the figure for those captured !

> *German Broadcast of the same date.* "Paris is one of the strongest fortresses in the world."

Now Paris is *not* a fortress. The fortifications were abolished in 1919 and the area used for flats at moderate rentals, public parks, and other peaceful purposes. Listen to this again !

Berlin Broadcast of June 7.

"The two Western Powers always based their actions on violence. During past centuries, France has several times waged wars of aggression, and the pages of history in England are full of descriptions of wars of aggressions."

I wonder what the dates of these aggressive wars of ours and our Allies were ! 1870, or 1914, or even 1939 ?

So much for information to their own people and the enemy Empire. Now listen to the sort of stuff served up to neutrals.

"The U. S. A. are neutral, and as a neutral country, however hostile the political views of any individual, they should stand outside the fire of hostilities."

Have you ever heard such impudent trash, when the so-called 'firing of hostilities' has already been carried by Germany to *five* neutral countries, who only wished and tried to stand outside it?

So much for Dr. Goebbels. Now listen to his Chief's principal confederate and admirer, one Mussolini, in his broadcast from Rome on the 10th of June last.

"Italy's vital rights "he thundered" have been menaced by a country which does not even belong to the nations whose territories border on the Mediterranean."

It sounds all right—it even gains sympathy—if one is ignorant. But what is the country he refers to? Both France and Britain have both Mediterranean territories, and mandates.

Now that is what we are up against, thousands upon thousands of officially-thought-out lies, poured out daily, regardless of how much credence they get, in the hope that a few people in each collection of hearers or readers may be ignorant enough or disaffected enough to take them for true, and pass them on to others of their kind until, for want of correctives, a growing proportion of thousands of small audiences the world over begin to admire their enemies and doubt their friends, lose their confidence and nurse and expand their fears. But, you may ask, how could such a system, even by radio, newspaper, leaflet circulation or '5th Column' agency, have any success or be any danger in a loyal Indian State like Pudukkottai? Listen, for answer, to the Führer, Adolf Hitler himself. In his own 'best-seller,' which has had a circulation surpassed only by the Bible, you will find the following enlightening precept. "A definite factor in getting a lie believed, is *the size of the lie*!" This is illuminating as a sidelight on human frailty, but remember it is an *axiom* of this new and loathsome science.

Now, apply this axiom, plus all the other devices, re-iteration, emphasis, careful contradictions of reports that were never published, and so on and so on, to innocent groups of uninstructed hearers, with *nothing* to counteract this—the only kind of *news* they may ever get. Is it not possible, is it not almost certain, that they will soon believe it—and pass it on? And if those innocent hearers are in a

locality which is within reach of politically or economically disaffected groups, will they not be encouraged in their doubts and dismays until the social and constitutional and financial structures under which we have lived loyally and happily so long, themselves begin to suffer?

With this attempt to explain the difference between enemy 'propaganda' and the Darbar's 'information bureau,' and the necessity for counteracting the former by the latter, I turn to the projected scope of our particular job. It will consist of periodical talks, perhaps weekly, perhaps fortnightly, in Pudukkottai—in this hall, in the College, in the Girl's High School and the Swedish Mission on different days of the week, and also in various schools and other places of assembly in the mofussil. The gist of the lectures will be recorded in Tamil and English pamphlets, and we shall be glad if you will take away a copy of this and the following lectures. You will also find attached, a summary of the more important events of the week. We start, as you perceive, "in medias res"; we want to keep these talks up to date, so it is no good going back over old history. Events move so swiftly, so much has happened in the past month, let alone the past nine months, that we deliberately start at the moment when the British Empire, shorn of the allies with whom she set out on the adventure, shoulders the whole burden of ridding the world of the frightful tyranny of Totalitarian Governments.

The decks are now cleared for action. The armour furnished by a series of alliances has once again been shown to have weaknesses—at the joints. From now onwards Britain clothes herself with armour of her own casting; it is unpierced, and almost undented. To that material advantage she adds a greater one, an impalpable one, but all the greater for being spiritual. It is that *her cause is right*. Freedom of conscience, freedom of political life, justice for all nations and not merely for a single predominant race or class, and the fundamental axiom that man is of the essence of God, that he has a body and a mind and a soul, and that he is *not* a piece of insignificant material to be moulded and punched and hammered into the mesh of the huge unfeeling machine of a Totalitarian State—these are the impalpable truths which so enormously fortify our cause.

Moral and spiritual values may be unreckonable, but they are as powerful as they are eternal. And since in this struggle they are, without any possibility of dispute, on the side of Britain, there can be only one outcome of this war, whatever its course and duration, and that is—Victory for us!

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயம்.

பிரஸங்கம் I.

நமது ராஜதானியிலும், மற்ற இடங்களிலும் யுத்த கமிட்டிகள் ஏற்பட்டுவருவது உங்களுக்குத் தெரியும். அதைப்போல இச்சமஸ்தானத்திலும் சீக்கிரத்தில் கமிட்டி ஒன்று ஏற்படப்போகிறது. அதை எதிர்பார்த்து, அதின் கார்யங்களில் ஒன்ருன பிரசார வேலையைச் செய்வதற்காக, முன்னதாகவே ஈ-தர்பார் அவர்கள் இந்த அறிக்கை நிலயத்தை ஸ்தாபித்திருக்கிருர்கள். யுத்தச் செய்திகளையும் அதை ஒட்டிய ராஜீயச் செய்திகளையும், அபிப்பிராயங்களையும் இன்னிலயம் உண்மை பிரசுரம் செய்யும். இதற்காக பிரஸங்கங்கள் நடைபெறும். இது அவைகளின் தலைப்பிரஸங்கம்.

டாக்டர் கோயபல்ஸ் (Dr. Goebbels) என்ற ஒரு ஜர்மானியர் பொய் பிரசாரம் செய்யப்போக பிரசார வேலைக்கே அபவாதம் வந்துவிட்டது. ஒருவன் பிரசார வேலைக்கு வெளிவந்தால், எங்கு பொய்யன் என்று பெயர் வந்துவிடுமோ என்று மனம் அஞ்சுகிறது.

நம் நிலயத்திலிருந்து வெளிவரும் செய்திகள், ஒன்று ஆங்கில ஸர்க்கார் விடுக்கும் செய்திகளாய் இருக்கும்; அல்லது நடு நிலைமை வகித்து கௌரவம் வாய்ந்த பத்திரிகைகளின் அறிக்கைகளாயிருக்கும். இவைகளை நம்பலாம். அதற்குக் காரணங்கள் உண்டு:—

முக்கிய காரணம் ஆங்கிலரின் ஸ்வபாவமே. இவர்கள் சொன்னதையெல்லாம் கேட்கமாட்டார்கள். உண்மையை மறைத்து ஹிதமான செய்தியைமட்டும் கேட்க விரும்பார்கள். தாத்கால்யமாய் அவர்களுடைய நன்மைக்கென்று சொன்னாலும் பொய் பிரசாரம் அவர்களுக்குப் பிடிக்காது. அப்படிப் பிரசாரம் செய்கிறவர்களையும் சும்மா விடமாட்டார்கள். கெட்ட செய்தியை கேட்க தைரியமுள்ளவர்கள்; அதன் விவரங்களெல்லாம் வேண்டுமென்பார்கள். நற்செய்தியையும் எவ்வளவு இனிப்பாய் இருந்தாலும் சரி, உத்ஸாகத்தையும், மனோபாவத்தையும் கொடுப்பதாய் இருந்தாலும்சரி, ஆரமர பரிசோதனை செய்து வெளி வந்தால்தான் நம்புவார்கள். ஆகவே யுத்தம் ஆரம்பித்ததுமுதல் ஆங்கில ஸர்க்கார் செய்திகளை உள்ளது உள்ள படியே பிரசுரித்துவருகிருர்கள். பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் இதில் வெகு ஜாக்கிரதை—நிபுணர்; அவர் அதிகாரத்தின்கீழ் வெளியாகும் செய்திகள் எல்லாம் நிச்சந்தேகமானவை.

மேலும், நான் மேலே குறிப்பிட்ட பத்திரிகைகள் ஸர்க்கார் பத்திரிகைகள் அல்ல; அவைகளை நடத்துகிறவர்கள் ஸர்க்கார் சிப்பந்திகள் அல்ல; அவைகளுக்கு வாய்பூட்டுக்கிடையாது. அபிப்பிராயங்களையும், செய்திகளையும் உள்ளபடியே வெளிப்படுத்துவார்கள்.

இவைகளை ஒட்டி இந்நிலயம் பிரசுரிக்கும்; இதை நீங்கள் நம்பலாம்; நம்பத்தகுதியானவை.

ஆனால் நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் எதிர்பார்க்கக்கூடாது உதாரணமாக பிரிட்டனில் விமானம் கட்டுகிறார்கள். அது மாதத்திற்கு 100 ஆ, 1,000 மா, 4,000 மா, என்று கேட்கலாம். அல்லது கேப் டவுனி (Cape Town) லிருந்து மாண்டிவிடியோ (Montevideo)-க்கு கப்பல் ஒன்று போகிறதே; அது பாரமேற்றிப் போகிறதா அல்லது ஆஸ்திரேலிய (Australian) துருப்புகள் 6,000 பேரை ஏற்றி பிளிமவுத் (Plymouth) துறைமுகத்துக்குப் போகிறதாவென்று கேட்கலாம். இவைகளுக்கு பதில் கொடுப்பது மோசம். எதிரி காதுக்கு எட்டினால் விபத்து. தர்மயுத்தத்தில்கூட எதிரியை ஏமாற்றுவது நியாயமாகும். இதுவின்றி நம் நிலயம் உண்மை பிரசாரமே செய்யும்; செய்திகளை புரட்டிச் சொல்லாது. கற்பனையும் செய்யாது.

இது நிற்க, எதிரியின் பிரசார முறைகளைச் சற்று கவனிப்போம். ஜர்மனியின் செய்தியெல்லாம் ஸர்க்கார் சரக்கு, அங்குள்ள ஜனங்களுக்கும், சைன்யங்களுக்கும், உலகத்துக்கும் தக்கவாறு செய்திகள் ஜோடிக்கப்படுகின்றன. ரேடியோ பத்திரிகைகள் வாயிலாய் இராப் பகலாய் ஓச்சல் ஒழிவில்லாமல் பிரசுரமாக்கப் படுகின்றன. பேட்டி காலங்களில் உத்தியோகஸ்தர்கள் இவைகளை ஒப்பிப்பார்கள்... இந்தியாவுக்கும் இவைகள் வெகுவாய் ஒலி பரப்பப்பட்டிருக்கின்றன.

இவைகளில் சிலவற்றை உதாரணமாக எடுத்துக் காட்டுகிறேன்:—

I. பேர்லின் ஒலி பரப்பு—ஜூன் 5.

செய்தி.—"3,30,000 ஆங்கிலர்கள் கைது செய்யப்பட்டார்கள். இது சமாதான காலத்தில் இங்கிலாந்தில் உள்ள படைகளுக்கு இரட்டிப்பாகும். ஜர்மன் ராணுவ இலாகா தகவல் கொடுத்திருக்கும் தொகைகளுக்குள் இது மிகச் சிறிது. ஆகவே 3,30,000-ஐ கரார் தொகையென்று வைத்துக்கொள்ளக் கூடாது."

அதாவது இன்னும் அதிகமும் இருக்கலாம் என்பது.

ஆனால் இதெல்லாம் அபத்தம். இங்கிலாந்தின் சமாதான காலத்திய சைன்யம் 25 ஆயிரம்தான்; அதை இரட்டித்தால் 50 ஆயிரங்களே ஒழிய, 3 லக்ஷத்து 30 ஆயிரம் ஆகாது. ஆனால் யுத்தகளத்தினின்று திரும்பி வந்த சைன்யம் 3 லக்ஷம், அந்தத் தொகையையே டாக்டர் கோயபல்ஸ் கைது செய்ததாக மாற்றிக்கொண்டார் போலும்; அவர் ஸாமர்த்தியமே ஸாமர்த்தியம்.

II. ஜர்மனி ஒலி பரப்பு—ஜூன் 5.

செய்தி.—"உலகத்தில் மகத்தான கோட்டைகளில் பாரிஸ் நகரம் ஒன்று."

என்ன விந்தை! பாரிஸ் கோட்டையை இடித்து 21 வருஷங்களாகின்றன, அங்கே இப்பொழுது வீடுகளும், தோட்டங்களும் ஏற்பட்டுவிட்டன, வேணுமானால் சொல்ப வாடகைக்கு மாடிகள் கிடைக்கும்.

III. பேர்லின் ஒலி பரப்பு—ஜூன் 7.

செய்தி.—"பிரான்ஸுக்கும், பிரிட்டனுக்கும் பிறர் நாட்டை அபகரிப்பது தான் வேலை. சில நூற்றுண்டுகளாக பிரான்ஸ் இம்மாதிரி யுத்தங்கள் அனேகம் செய்திருக்கிறது, பிரிட்டன் தேச சரித்திரத்தில் இம்மாதிரி சண்டைகள் நிரம்பி யிருக்கின்றன."

இது ஆதாரமில்லாதது. யார் சண்டை செய்தார்கள்? எப்போ? வேணுமானல் ஜர்மனி மண்ணாசை கொண்டு செய்த சண்டைகளை நாம் சொல்லலாம், 1870—பிரான்கோ-ஜர்மன் யுத்தம்; 1914--ஐரோப்பிய மகா யுத்தம்; 1939—நடப்பு யுத்தம்.

IV. செய்தி.—"அமெரிக்க ஐக்கிய நாடு (U. S. A.) நடுநிலைமை கொண்ட நாடு. சில நபர்கள் அபிப்பிராயம் விரோதமாயிருந்தாலும் இவ்வரசாங்கம் நடு நிலைமையையே வகிக்கவேண்டும்—சண்டையில் சேரக்கூடாது."

என்ன தர்ம உபதேசம்—நடு நிலைமையாம்; சும்மாயிருக்கவேணுமாம், நார்வே, டென்மார்க், ஹாலண்டு, லக்ஸம்பர்க், பெல்ஜியம் ஒதுங்கி நின்றனவே; எந்த நியாயத்தில் ஜர்மனி இவைகளை ஆக்ரமித்தது.

V. இவ்வுதாரணங்கள் எல்லாம் டாக்டர் கோயபல்ஸ் பட்டரையில் உற்பத்தியானவை, இவருக்கு யஜமான் ஹிட்லர்; ஹிட்லருக்கு ஸகா முஸ்லோனி, கீழ்கண்டிருப்பது ஜூன் 10ல் முஸ்லோனி கர்ஜித்து ஒலிபரப்பியது.

செய்தி.—"மத்தியதரை (Mediterranean) கடலைச் சுற்றி ஆதிபத்யமில்லாத நாடொன்று இதாலியின் உயிர் நிலையான உரிமையை கெடுக்க முயன்றது."

மெய்யைப் போல் இருக்குமாம் பொய். தெரியாதவர்கள் மெய்யென்று நம்பி அனுதாபம் காட்டக்கூடியதாய் சொல்லப்பட்டிருக்கிறது. இதாலி மத்யதரை கடல் பிரதேசம். உள்ளூரானை வெளியூரான் விரட்டப் பார்ப்பதாக பிரசாரம். ஆனல் பிரான்ஸுக்கு இங்கே பூமியுண்டு; இங்கு இருக்கும் சில நாடுகள் பிரிட்டனுடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டவை.

இம்மாதிரி உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

பொய்ப்பிரசாரத்தை அசட்டை செய்யக்கூடாது. அதன்பால் விளையும் தீங்கு பெரிதாகும். ஜர்மனியில் இதற்காக இலாகா ஒன்று ஏற்படுத்திக்கொண்டு செய்திகளை தயாரிக்கிறார்கள். நம்பினாலும் சரி, நம்பாமல் போனாலும் சரி, சரமாரியாக தினம்தோறும் இதை பிரசுரிக்கிறார்கள். கேட்பவர்களில் சிலர் அசடுகளாய்த்தான் இருப்பார்கள். சிலர் நடைபெறும் அரசியலில் கசப்புள்ளவர் களும் உண்டு. இவர்களுக்கு ஏதாவது அகப்பட்டால் போதும். இவரைப் போன்று இன்னும் சில மற்றவர்களுக்கு இவர்கள் பரிமாறுகிறது. இதை பொய்யென்று சொல்ல எதிர் பிரசாரமும் கிடையாது. இவ்வாறு, உலக முழுவதும், பல இடங்களில், சிறுசிறு சமூகங்களில், நமக்குத்தெரியாது,

பொய்ச்செய்தி நிலைத்துவிடுகிறது. இது மோசம். இதிலிருந்து எதிரியை கொண்டாடுகிறதும், நேயர்களை சந்தேகிக்கிறதுமாக ஏற்படுகிறது. மனக் கலக்கமும், மனக்கலக்கத்திலிருந்து பயமும், பயத்திலிருந்து கிலியும் உண்டாகின்றன.

இவ்வித அபாயகரமான பிரசாரத்தை துண்டுப்பத்திரிகை, தினசரி பத்திரிகை ரேடியோ, துரோகிகள் (5-ம் படை) மூல்யமாய் எதிரி பரவச்செய்து வருகிறான். நாம் சும்மா இருக்கக்கூடாது.

ஆனால் ராஜவிசுவாஸம் நிறைந்த புதுக்கோட்டையில் இதுவெல்லாம் பலிக்குமா; பிரசாரம் எதற்கு என்று கேட்கலாம். ஏன் பலிக்காது. மனிதஸ்வபாவம் எங்கும் ஒன்றுதான். எதிரியோ பொய் பிரசாரத்தை ஒரு சாஸ்திரமாக ஆக்கிவிட்டான். அதன் முதல் சூத்திரம், "எவனையும், பொய்யை நம்பச்செய்யலாமென்பது." பைபிள் (Bible)க்கு அடுத்தபடி நல்ல விற்பனையாகும் புஸ்தகம் ஹிட்லர் எழுதியது. அதில் 'பொய்யை மெய்யாக்க அதை பெரிதாக்கு' என்று உபதேசித்திருக்கிறார். பொய்யை அபாண்ட புளுகாக செய்தால் நம்பிவிடுவார்கள் என்பது மனித ஸ்வபாவம். பொய்யைத்திருப்பித்திருப்பிச் சொன்னால், "எறும்பூர கல்லும் தேயும்" என்பதுபோல மனது மாறிவிடும். மற்றொருமுறை அதை அழுத்திச்சொல்லவேண்டும். பிறகு, வேறு ஒரு செய்தி வந்திருப்பது போலவும், அதை மறுப்பதாகவும் பாசாங்கு செய்யவேணும். எதிர் பிரசாரமில்லாதவரை, இதை நம்ப இடம் கொடுக்கிறது. தான் கெட்டதுமன்றி, பிறரையும் கெடுப்பார்கள். அரசியல் (Politics), செல்வநிலை (Economic), இவைகளில் மனக்கசப்பு இருந்தால், பஞ்சில் நெருப்புப்பிடித்ததுபோல், சந்தேகமும், பீதியும் பரவும். ராஜவிசுவாஸத்தோடு இதுவரையில் சுகமாக வாழ்ந்தது போக, அரசியல், சமூகம், செல்வம் ஆகிய இவைகளின் க்ஷேமத்துக்கும், நீதிக்கும் கேடுவரும்.

இதுவரை, எதிரி பிரசாரத்துக்கும் நம் பிரசாரத்துக்கும் உள்ள வித்தியாஸங்களை எடுத்துக்காட்டினேன். இனி நாங்கள் செய்ய உத்தேசித்திருக்கும் வேலையைப்பற்றி சொல்லுகிறேன். முதலாவது—பிரஸங்கங்கள். இவை இவ்வூரில், டவுன் ஹாலிலும், காலேஜ், மிஷன், ராணி பள்ளிக்கூடங்களிலும் வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை நடக்கும். இம்மாதிரியே, கிராமங்களிலும் பிரசாரம் நடக்கும். பிரஸங்கங்களின் ஸாராம்சத்தை ஆங்கிலத்திலும், தமிழிலும் துண்டு பத்திரிகைகளில் பிரசுரிப்போம். அத்தோடு வாரா வாரம், செய்திச்சுருக்கம் ஒன்றும் வெளிவரும்.

யுத்தம் துவக்கி இந்த ஒன்பது மாதகாலத்தில் எவ்வளவோ காரியங்கள் நடந்து விட்டன. சென்றமாதம் ஒன்றிலேயே நடந்தது எத்தனையோ. இப்பழங் கதையெல்லாம் மறுபடியும் சொல்லிக்கொண்டு இருக்கிற உத்தேசமில்லை. தனக்கு ஆரம்பத்திலிருந்த நேயர்களைத்துறந்து, ஸர்வாதிகார எதிரியின் பயங்கர கொடுங்கோலை ஒழிக்க பிரிட்டன் யுத்தத்தில் தனியே, இறங்கியிருக்கும் இடத்திலிருந்து இக்கதையை நாம் சொல்ல ஆரம்பிப்போம்.

ஆம், யுத்தகளம் நேயர்களல்லாது இப்போழுது காலியாய் நிற்கிறது. பிரிட்டன் கச்சைகட்டி களத்தில் தனியே இறங்கி விட்டது. தான் தரிக்கும் கவசத்தை மாற்றிவிட்டது. இது வரையில் அணிந்த கவசம் நேயர் பலம். அதில் எத்தனையோ ஓட்டைகள்; அதின் பூட்டுகளில் பலமில்லை. ஆகவே இரவல் கவசத்தை எறிந்துவிட்டு, சொந்த கவசத்தை பூண்டு விட்டது. இது சொந்த ராணுவபலம். இது வரையில் இக்கவசம் பிளக்கப்பட்டதில்லை. காயப்பட்டதும் இல்லை. பிரிட்டனுக்கு இவ்வெளிக் கவசத்தோடு ஐம்புலனுக்கப்பால் உள்ள உள் கவசம் ஒன்றும் உண்டு. நமது யுத்தம் தர்ம யுத்தம். எதிரி நாடுகள் ஏகாதிபத்திய நாடுகள். அங்கே பிரஜைக்கு ஸ்வதந்திரம் கிடையாது. அவனுக்கு சொந்த உடல், உயிர், ஆவி, மனோபாவம் இருப்பதாகக் கருதப்படுகிறதில்லை. இரும்பைத் தட்டி வளைத்து, துளைத்து யந்திரங்கள் செய்வதுபோல் மனிதனை தோன்றியபடி திருப்பலாம் என்ற கொள்கைகொண்ட நாடு. பிரிட்டனோ மனிதனை கடவுளின் அம்சம் என்று மதிக்கிறது. மனச்சாட்சியை கட்டுப்படுத்துவதில்லை. ராஜீய நோக்கங்களில் சுயேச்சையுண்டு. ஜாதி, வகுப்பு வித்தியாஸங்கள் கிடையாது. முக்கியமானவர்களுக்கு சலுகை காட்டுகிறதில்லை. ஸர்வத்திரர்களுக்கும் பொது நியாயம். இவைகளிலிருந்து நமக்கு ஆத்ம பலமுண்டாகிறது. வெளிப்படையாய் புலப்படாவிட்டாலும், இது, அந்தரங்கத்தில் மகத்தான பலத்தைக்கொடுக்கிறது.

ஆத்மபலமும், தர்மதேவதையின் பலமும் நமக்குண்டு. இதைக்கணக்கிட முடியாது. இதன் சக்தியோ அபாரம்; சாசுவதம். இப்போரில், இந்த பலம், நிச்சந்தேகமாய் நமக்குண்டு. நடுவில் போரின் ரீதி எப்படியிருந்தாலும், முடிவில், ஜயம் நமக்குத்தான் என்பது திண்ணம்.

WEEKLY WAR SUMMARY.

2—7—40 to 9—7—40.

The collapse of FRANCE, the Armistice, and the PETAIN Government are old stories. By her own unheroic act FRANCE has sold herself to the enemy and temporarily altered the balance.

2. The first repercussion has been in the BALKANS. RUMANIA raped of BESSARABIA and N. BUKHOVINA has renounced the Allies' Guarantee of April 13, 1939 and moving into the Nazi orbit (July 2) has started the old dirty Nazi game of Jew-baiting (July 3) TURKEY fearful of the Soviet stab stands aloof after re affirming her faith in her great Ally (July 2). In AFRICA, EGYPT has re-affirmed her neutrality and friendship for BRITAIN (July 3); SYRIA and LEBANON are becoming cockpits and the Libyan sands are echoing to the sound of shell and gun fire (July 1). EIRE is mobilising but hopes to keep its neutrality both against ENGLAND and GERMANY (July 8). King Haakon has refused to abdicate in spite of Nazi threats (July 8).

3. Nearer home, JAPAN, taking advantage of the confusion, is blocking the trade routes of FRENCH-INDO-CHINA to CHINA and stands, sword drawn, within 12 miles of the boundary. HONG-KONG is being evacuated, a preliminary to British military action, if necessary; and the defences of SINGAPORE are being strengthened—let us hope—as a mere precaution.

4. At the other end of the world URUGUAY has had a narrow escape from Nazi the 5th Column machinations (July 2) and the appointment of Mr. H. L. Stimson and Col. Frank Knox to the American Army and Navy Departments, and their utterances during the week have heartened the British Cause.

5. PETAIN's Government hounded from place to place has settled at last at VICHY and convoked its national assemblies. It severed diplomatic relations with BRITAIN on the 5th and recalled its Ambassador on the 8th. It is convoking its representatives for its hara-kiri. Every Frenchman, still hoping for freedom is rallying under General de Gaulle in ENGLAND for a renewal of the struggle.

6. The greatest event of the week is undoubtedly the disabling of the greater part of the French Fleet. From the moment the collapse of FRANCE became inevitable the French Fleet became a problem. It was clear it would prove a menace if it fell into enemy hands. Though assurances were given in the Armistice Terms the Nazi word was not to be trusted. So many pledges solemnly given had been dishonoured. The French Fleet should be seized for BRITAIN'S safety, FRANCE'S restoration and the peace of the world. Mr. Churchill, the Pitt of the hour, took the painful and bold step—painful to his late ally, bold in its conception and execution. In the early hours of July 3 the British Navy took over, with very little bloodshed 2 battleships, 2 cruisers, some submarines and 200 mine-sweeping and anti-submarine air-craft in the British harbours. The French ORAN (NORTH AFRICA) Fleet disobeying, the British Fleet fired, torpedoed or sunk 3 capital vessels and many lighter craft. On July 6, the French Navy at ALEXANDRIA was demobilised and the last event of the series was the disabling, on the 8th, of Richelieu, the most modern of the French battleships.

7. Every tragedy has its humour. During the battle of ORAN the Italian Fleet looked on but did not join the fray. Discretion is the better part of Valour.

8. German frightfulness at sea has not yet subsided; on July 3, she torpedoed "Arandora Star" with 2,000 people on board, drowning 843 of her own countrymen and 470 Italians.

9. Aerial combats have been continuous during the week. The Nazi pays his daily visits to BRITAIN and after receiving a warm reception drops into the sea or retreats, having shelled a wayside cottage, a baby in arms or a cripple, or a few other non-combatants. On the 3rd he carried out a daylight raid with the loss of 6 bombers and the damage of 4 more; on the 5th, he preferred a night attack over the South Coast with the loss of 2 planes; on the 7th the Channel Coast was visited with the loss of 3 Fighters and on the 8th, the Coast was again attacked—result :—'Six planes shot down'—'Little damage—no Casualties.'

10. ITALY, imitator of her master in all humility has been dropping occasional bombs into MALTA or ALEXANDRIA; but her heart, if she has one, is not very much in the game. She may have caught a tartar.

11. The R. A. F. has been hitting back—to better purpose—delivering its assaults on military objectives in Germany, Enemy-occupied countries and ITALY in AFRICA and EUROPE :—

2nd.—KIEL (GERMANY) bombed—Quayside blazing—Scharnhorst damaged.

Gondar Aerodrome and MERSA MATRUTH (ABYSSINIA) bombed. SICILY oil tanks in flames.

3rd.—Brussels, Ypenburg, the Hague, Dekodi, Merville (occupied territories) raided.

5th.—Day light raids over German Naval bases—Kiel, Wilhelmshaven and Emden; Oil refineries at Hanover, Emmerich; military objectives at Hamm and Soest and air ports at Amsterdam and Brussels.

6th.—Day light raids over German Naval bases—Waelhaven, Flushing, Cuxhaven, Hamburg (Germany), El Gubbi (Africa).

7th.—Day light raids over Italian Naval base—Tobruk.

8th.—Day light raids over German Naval bases—Frankfurt, Osnabruck, etc.

12. In the midst of this welter, Hitler has chosen to celebrate a triumph in BERLIN on the 6th and his minions have shouted "We shall march against ENGLAND." But the skeleton is in his cupboard. The Germans are already war-weary (July 2). In occupied HOLLAND, food is short, business low and unemployment increasing (July 2). Her mercantile losses up to June 30th are 8,57,000 tons. Her blockade has not affected BRITAIN; 7,533 British, Allied and Neutral ships were convoyed during the period with a loss of 42 only (July 2). The German Casualties have mounted to at least 4,00,000 (July 4). The British blockade has begun to tell and foodstuffs are taken out of FRANCE into GERMANY, and its people are told that BRITAIN, her late ally is withholding supplies (July 6).

13. On the other hand, the Empire preparations are heartening. Production of air-craft has been doubled since this time last year (July 7). Some 1,000 airmen a week are under training in CANADA (July 2). Home defences have been completed and in the words of Major Atlee, the whole Nation is preparing, waiting for the Zero Hour.

14. BURMAH has promised unconditional support. Despite the Congress Resolution, War efforts are mounting in India. The munitions drive has started; some 140 Engineering factories and Railway Workshops have been inspected and some already utilised. Messrs. Tata and Walchand have been consulted on the manufacture of air-craft. Provincial Advisory War Supplies Committees have been started at Bombay and Cawnpore (July 4 & 5). As an item of local interest, the Governor's War Fund has reached Rs. 4,12,171—10—3 and the Madras Mail War Plane Fund Rs. 1,28,107—4—6.

வார யுத்தச் செய்திகள்.

(2—7—40 லிருந்து 9—7—40 வரை)

பிரான்ஸ் முறியடிக்கப்பட்டதும், ஜர்மனியோடும் உடன்படிக்கை செய்து கொண்டதும், பிடேயன் (Petain) அரசாங்கம் ஏற்படுத்தியதும் பழங்கதையாய்ப் போயின. கோழைத்தனத்தால் தன்னையும் கெடுத்துக்கொண்டு, உலகத்துக்கே வம்பையும், விளைவித்து விட்டது.

2. முதல் அனர்த்தம், பால்கனில் (Balkans), பெஸரேபியா, (Bessarabia) வையும், வடபுகோவினு (N. Bukhovina)வையும், ருமேனியாவிடமிருந்து ரஷ்யா பிடுங்கிக்கொண்டது. ருமேனியா வாய்திறக்காமல் ஒப்புக்கொண்டு, ஏற்கனவே இங்கிலாந்தோடு, 1939-ம்வூ ஏப்ரல்மீ 13-ல் செய்த உடன்படிக்கையையும் ரத்து செய்துவிட்டு, ஜர்மனி கக்ஷியில் சேர்ந்து கொண்டது. அதோடு, ஜர்மனியைப்போலவே, யூதர்களை ஹிம்ஸை செய்யும் கேவலத்தொழிலில் இறங்கி விட்டது. துருக்கி (Turkey) ரஷ்யாவுக்கு பயந்து சண்டையில் சேராமல் ஒதுங்கி நிற்கிறது; ஆனால் இங்கிலாந்தை தன்னுடைய பெரிய நண்பர் என்பதை மறக்கவில்லை. ஸிரியா (Syria), லெபானன் (Lebanon) நாடுகள் யுத்தகளங்களாய் மாறிக்கொண்டிருக்கின்றன. லிபியா (Libya) பாலைவனத்தில் வெடிகுண்டு, பீரங்கி வேட்டுகள் அதிகரிக்கின்றன. எயிரி (Eire-Ireland) யோ, ஒரு கக்ஷியிலும் சேராமல், படையை மட்டும் திரட்டிக்கொண்டு வருகிறது. ஹாக்கான் (Haakon) என்ற நார்வே (Norway) அரசரை ஜர்மனி பயமுறுத்தியும் ராஜ பதவியை ராஜீனுமா செய்யச்சொல்லியும் கேட்கவில்லை.

3. ஆசியாவில், (Asia), "இதுதான் சமயம், அடித்தது லாபம்" என்று எண்ணி, ஜப்பான் (Japan), பிரெஞ்ச்–இண்டோ-சைனு (French–Indo-China) விலிருந்து, சைனு (China)வுக்குப் போகும் பாதையில், 12 மைலுக்கு அப்பால் நின்றுகொண்டு ஆர்பாடம் செய்கிறது. சீனுவில் உள்ள ஹாங்காங்கி (Hong-kong)ல், சண்டை வருமோ என்று ஸ்திரீ, குழந்தைகளை அப்புறப்படுத்துகிருர்கள். சிங்கப்பூர் (Singapore) ராணுவ பந்தோபஸ்துகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன; இது முன் ஜாக்கிரதைக்காகவும் இருக்கலாம்.

4. அமெரிக்காவில் உருக்வே (Uruguay) நாட்டில் துரோக ஜர்மானியா உள்ளிருந்து சூழ்ச்சிசெய்து, ராஜ்யத்தைக் கவுக்கப்பார்த்தார்கள். தெய்வாதீனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்க நாட்டில் (U. S. A.) இங்கிலாந்துக்கு வேண்டியவர்களான மிஸ்டர் H. L. ஸ்டிம்ஸன் (Stimson) யுத்த மந்திரியாயும், கர்னல் பிரான்க் நாக்ஸ் (Col. Frank Knox) கடற்படை மந்திரியாயும், நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்களால், உதவி அதிகமாய் இல்லாமற்போனுலும், அவர்களுடைய ஹிதவார்த்தைகள் தெம்பைக்கொடுக்கின்றன.

5. பிரான்ஸில் பிடேயன் (Petain) அரசாங்கம் நிற்க இடமில்லாமல் கடைசியாக விஷி (Vichy) என்ற ஊருக்கு வந்திருக்கிறது. பிரிட்டனுடைய சிநேகத்தை ரத்துசெய்துவிட்டு, அங்கு இருந்த தன் மந்திரியை திரும்பிவரச் சொல்லிவிட்டது. அரசாங்க ரீதியை அடியோடு மாற்றி உள்ளதையும் கெடுத்துக் கொள்ள தன் சபையைக் கூட்டியிருக்கிறது. இன்னும் சுயேச்சையில் எண்ணங் கொண்ட பிரான்ஸ்காரர்கள் எல்லோரும், ஜெனரல் டி கால் (General De Gaulle) உடன் சேர்ந்து இங்கிலாந்தில் யுத்த ஸான்னித்தியமாகிறார்கள்.

6. இந்த வாரத்தில் நடந்த ஸம்பவங்களில் முக்கியமானது பிரான்ஸ் கப்பல் படையைப் பெரும்பாலும் பிடித்ததாகும். பிரான்ஸ் கவிழ ஆரம்பித்தது முதல், இங்கிலாந்துக்கு இப்படையை எப்படி கைப்பற்றுவது என்பதுதான் கவலை. எதிரி பிடித்துக்கொண்டால் பிரிட்டன் மேலே இதை திருப்பி விடுவான். பிரான்ஸுக்கும் ஜர்மனிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி, தான் அதை யுத்தத்தில் உபயோகப் படுத்தவில்லையென்று எதிரி உறுதிமொழி கூறியிருந்தாலும், நம்புவதற்கில்லை. எதிரிக்கு நாணயம் கிடையாது; இது அனுபவசித்தம். ஆகவே பிரான்ஸ் கப்பல் படையைக் கைவசப்படுத்துவது, இங்கிலாந்து, பிரான்ஸ், உலகம் இவைகளின் க்ஷேமத்துக்கு அவச்யமாயிற்று. பிரான்ஸ் நேற்றுவரை துணைவராயிற்றே என்று தயங்குவதற்கு ஸமயம் இதுவல்ல. துக்கமான காரியமானாலும் தைரியமாய் செய்து முடிக்கவேண்டியதுதான். முன்னொரு காலத்தில், ஆபத்துஸமயத்தில் இங்கிலாந்தை தைரியமாய் இம்மாதிரி காப்பாற்றியவர் பிட் (Pitt) என்ற மந்திரி அவரைப்போல இப்பொழுது பிரதம மந்திரியான மிஸ்டர் சர்ச்சில் (Mr. Churchill) உத்தரவிட, இங்கிலாந்து துறைமுகங்களில் தங்கியிருந்த பிரஞ்சு சண்டை கப்பல்கள் (Battleships)—2; சின்ன சண்டை கப்பல்கள் (Cruisers)–2; நீர் மூழ்கிகள் (Submarines) சில; வெடிகுண்டு பொறுக்கும் கப்பல்கள் நீர் மூழ்கியைத் தாக்கும் கப்பல்கள் 200 இவைகள் பிடிக்கப்பட்டன. வட ஆபிரிக்காவில் ஓரான் (Oran) துறைமுகத்தில் பிரஞ்சு படையொன்று இருந்தது. அது தாக்கிப் பிடிக்கப்பட்டது; இதில் அனேக பிரஞ்சுக்காரர்கள் மாண்டார்கள். அலக்ஸான்டிரியா (Alexandria) துறைமுகத்தில் மற்றொரு படையிருந்தது; இதுவும், உயிர்ச்சேதம் இல்லாமல் நிராயுதபாணியாக்கப்பட்டது. கடைசியாக ரிசலூ (Richelieu) என்ற யுத்தக் கப்பல் பாக்கி; அது சமீபத்தில் கட்டப்பட்டது; இதுவும் 8-ம் தேதி சேதப்படுத்தப்பட்டது.

7. இத் துக்க நடவடிக்கைகளுக்கு இடையே சிரிப்பான காரியம் ஒன்று நடந்தது. ஓரான் (Oran) யுத்தம் நடந்தபோது இதாலி கப்பற்படை பக்கத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. தைரியமில்லைபோலும்.

8. தவிர, ஜர்மனியின் கொரேபுத்தி இன்னும் மாறவில்லை. ஜூலை மாதம் 3-ம்தேதி 2,000 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டுபோன அரண்டோரா ஸ்டார் (Arandora Star) என்ற கப்பலை உடைத்து, எல்லோரையும் சேதமாக்கியது. அவர்களில் அவர் ஊரார்களே 843; இதாலியர்கள்—470.

9. விமானச்சண்டைகள் தினம் நடந்து கொண்டிருக்கின்றன. ஜர்மன் விமானங்கள் ஒவ்வொருநாளும் பிரிட்டனை எட்டிப்பார்க்கின்றன. பலனைக்காணோம். வந்தவுடன் நில பீரங்கிகளாலோ ஆங்கில விமானங்களாலோ தாக்கப்பட்டு கீழே விழுகின்றன அல்லது திரும்பிவிடுகின்றன. உயிர்ச்சேதம் கிஞ்சித்து ஏதோ ஒரு கிராமத்தில் ஒரு குடிசை, அல்லது குழந்தை; அல்லது முடம் அல்லது சில பேர்கள் சேதம். உதாரணமாக:—3-ம் தேதி வந்த விமானங்களில் 6 சேதம், 4 பேர்; 5-ம் தேதி வந்தவைகளில் 2 சேதம்; 7-ம் தேதி—3; 8-ம் தேதி—6; நமக்கு நஷ்டம் வெகுவாய் கிடையாது; இத்தேதியில் ஒருவரும் சாகவில்லை. இவ்விமானங்கள் பிரிட்டிஷ் கால்வாயி (British Channel)லும், இங்கிலாந்தின் தென்கரை ஓரங்களிலும் வந்துபோகின்றன.

10. இதுபோல, இதாலியும், மால்டா (Malta), அலெக்ஸாண்டிரியா (Alexandria) முதலிய ஊர்களில் விமானங்களைக்கொண்டு தாக்குகிறது; சேதம் அதிகமில்லை.

11. ஆங்கில விமானங்கள் பழிக்குப்பழி வாங்கிக்கொண்டிருக்கின்றன; ஆனால் யுத்த ஸாதன நிலயங்களைமட்டுமே தாக்குகின்றன. ஜர்மனி, ஜர்மனிக்கு வசமான நாடுகள், இதாலிக்குச் சொந்தமான ஆபிரிக்கா நாடுகள், இவைகள் மீதெல்லாம் படையெடுக்கின்றன.

ஜுலை 2—கீல் (Kiel) தாக்கப்பட்டது; துறைமுகம் தீப்பிடித்தது; ஷார்ன ஹார்ஸட் (Scharnhorst) என்ற யுத்தக்கப்பல் தாக்கப்பட்டது. இதே தேதியில் காண்டார் (Gondar), மெர்ஸா மாட்ரூத் (Mersa Matruth) என்ற அபிஸீனிய (Abyssinia) விமான நிலயங்களும் தாக்கப்பட்டன.

ஜுலை 3—தாக்கப்பட்ட இடங்கள்—பிரஸல்ஸ் (Brussels), ஒய்பன்பர்க் (Ypenburg), ஹேக் (The Hague), டெகோடி (Dekodi), மெர்வில் (Merville) இவைகள் எல்லாம் ஜர்மனி பிடித்துக்கொண்ட ஊர்கள்.

ஜுலை 5— தகத்தப்பட்டவை:— கீல் (Kiel), வில்ஹேம்ஷேவன் (Wilhelmshaven), எம்டன் (Emden)—கப்பற்படை நிற்கும் இடங்கள்; ஹானேவர் (Hanover), எம்மரிச் (Emmerich)—எண்ணெய் சுத்திசெய்யும் இடங்கள்; ஹாம் (Hamm), ஸோயஸ்ட்டு (Soest) ராணுவஸ்தலங்கள்; ஆம்ஸ்டர்டாம் (Amsterdam), பிரஸல்ஸ் (Brussels) விமான ஸ்டேஷன்கள்.

ஜுலை 6, 7, 8—தாக்கப்பட்ட இடங்கள் வாயல்ஹேவன் (Wailhaven), ப்லஷிங் (Flushing), கக்ஸ்ஹேவன் (Cux haven), ஹாம்பர்க் (Hamburg)—இவை ஜர்மானியில்; எல்குப்பி (Elgubbi), ஆபிரிக்காவில்; டோப்ரக் (Tobruk) பிரான்க்பர்டு (Frankfurt), ஆஸ்னுப்ரக் (Osnabruck)—ஜர்மனியில்.

12. இந்த களேபரத்தில் 6-ம் தேதி ஹிட்லர் (Hitler) பெர்லின் (Berlin) ஊர்வலம் வந்தார்; அவரைச்சேர்ந்தவர்கள், இங்கிலாந்தின் பேரில் படை எடுப்போம் என்று கூவினார்கள். ஆனால் அவருக்கு கஷ்டகாலம் நெருங்குகிறது.

ஜர்மானியருக்கு யுத்தம்போதுமே என்ற அசிரத்தை ஆரம்பித்திருக்கிறது. பிடித்துக்கொண்ட ஹாலந்தி (Holland)-ல் உணவுப் பொருள்கள் குறைந்து வருகின்றனவாம், வியாபாரம் கம்மி, தொழிலிலாத் திண்டாட்டம். ஜர்மனிக்கு ஜூன் 30 வரை, 8,57,000 டன் நிறையுள்ள வியாபாரக்கப்பல்கள் நாசம். ஜர்மனியால், இங்கிலாந்தின் வியாபாரம் குறையவில்லை. இதே தேதிக்குச் சரியானகணக்கில் 7,533 வியாபாரக்கப்பல்களை, பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் துணையிருந்து பத்திரமாய் கொண்டு சேர்த்திருக்கின்றன; இதில் 42 தான் சேதம். இது நிற்க, பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் வளைத்துக்கொண்டிருப்பதால் ஜர்மனிக்கும் அதைச்சேர்ந்த நாடுகளுக்கும் உணவுப் பொருள்கள் வந்து சேருகிறதில்லை. ஏற்கனவே உணவுப்பொருள்கள் சரியாய்க்கிடைக்கவில்லை என்ற புகார் பிரான்ஸில் வந்துவிட்டது. எல்லாம் இங்கிலாந்தின் சூழ்ச்சிதான் என்று ஜர்மானியர் பழி சுமத்துகிறார்கள்.

13. பிரிட்டிஷ் ஸாம்ராஜ்ய (British Empire)-த்தில் செய்துவரும் யுத்த ஏற்பாடுகள் மனதை திடப்படுத்துகின்றன. முன்னைவிட, இப்பொழுது விமானங்கள் மாதத்திற்கு இரண்டு பங்கு கட்டப்படுகின்றன. கானடா (Canada)-ல், விமானிகள் வாரத்துக்கு 1,000 வீதம் பழக்கப்படுகிறார்கள். இங்கிலாந்தில் எதிரியை எதிர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்தாய்விட்டது. எதிரியை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

14. பிரதிப் பிரயோஜனம் ஒன்றும் எதிர்பார்க்காது பர்மா (Burmah) யுத்த உதவிசெய்ய வாக்களித்துவிட்டது. காங்கிரஸ் தீர்மானங்கள் எப்படி இருந்தபோதிலும், யுத்த தளவாடங்கள் செய்ய இந்தியாவில், 140 பட்டரைகளையும், இயந்திரசாலைகளையும், பார்வையிட்டு, அவைகளில் சிலவற்றை பொறுக்கியாய் விட்டது. விமானங்களைச் செய்ய மி-டாடாவையும் (Mr. Tata), மி-வால்சந்தை (Mr. Walchand)-யும் கலந்து ஆலோசிக்கப்படுகிறது. யுத்ததளவாட ஸப்ளை ஆலோசனை கமிட்டிகள் (Provincial Advisory War Supplies Committees) பல ஊர்களில் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. மேன்மைதங்கிய சென்னை கவர்னர் யுத்தநிதிக்கு இன்றுவரை சேர்ந்திருக்கும் பணம் ரூ 4,12,171—10—3; மெட்ராஸ் மெயில் யுத்தவிமான பண்டுக்குசேர்ந்திருப்பது ரூ 1,28,107—4—6.

Sri Brihadamba State Press, Pudukkottai, 1,525—12-7-40.